


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.9.2023) தலைமைச் செயலகத்தில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் மகள் திருமதி. பிரபாராணி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன். தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலன் மற்றும் நிர்வாகிகள், மக்கள் விடுதலைக் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் சந்தித்து, தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

திண்டுக்கல் - அம்பிளிக்கை சுரேஷ் மர்ம மரணம்! ஒட்டன்சத்திரம்

# அ.தி.மு.க. செயலாளர் நடராஜனின் ஜாமீன் மனு தள்ளுபடி!

## உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவு!

திண்டுக்கல், செப்.21-

திண்டுக்கல், அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததையடுத்து நடைபெற்று வரும் வழக்கில் தன்னையும் சேர்க்க போலீசார் முயற்சி எனக்கூறி அ.தி.மு.க.வைச் சேர்ந்த நடராஜன் என்பவரின் முன் ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளரும், 2021ஆம் ஆண்டில் நடந்த சட்டசபை தேர்தலில் தற்போதைய அமைச்சர் அர.சக்கரபாணியை எதிர்த்து ஒட்டன்சத்திரம் தொகுதியில் அ.. தி.மு.க. சார்பில் போட்டியிட்டவருமான நடராஜன், தனக்கு முன்ஜாமீன் கேட்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் அவர் கூறியிருந்ததாவது:

திண்டுக்கல் மாவட்டம் அம்பிளிக்கை கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது 30). கடந்த மாதம் மர்மமான முறையில் இறந்ததாகவும் அவரது உடலை உறவினர்கள் மயானத்தில் வைத்து எரித்துவிட்டதாகவும் கிராம நிர்வாக அலுவலர் போலீசில் புகார் தெரிவித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வடிவேலு உள்ளிட்ட சிலரை கைது செய்தனர்.

இந்த நிலையில் சுரேஷ் இறப்பு தொடர்பாக மேலும் சிலர் மீது சந்தேகப்படும் வகையில் போலீசார் விசாரித்து வருகின்றனர். கைதானவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் என்னையும் இந்த வழக்கில் சேர்க்க போலீசார் முயற்சி செய்கின்றனர்.

இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை. இந்த வழக்கில் எனக்கு முன்ஜாமீன் வழங்கி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி இளங்கோவன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு கூடுதல் குற்றவியல் வக்கீல் பா.நம்பி செல்வன் ஆஜராகி, சுரேஷ் மர்மமான முறையில் இறந்தது குறித்து மனுதாரரிடம் போலீசார் காவலில் விசாரிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விவகாரம் தீவிரமானது என போலீசார் கருதுகின்றனர். இதனால் மனுதாரருக்கு முன்ஜாமீன் அனுமதிக்க கூடாது. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதாடினார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, மனுதாரரின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.







